1990, சனவரி 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் 4 முறை மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடுசென்றார். முதல் தடவை அவரோடு சென்றவர்கள் 29 பேர்; இரண்டாவது முறை உடன் சென்றவர்கள் 12 பேர்; மூன்றாவது முறை 8 பேர் ; நான்காவது முறை 12 பேர்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருக்கிறார்களா ? அவர்களுடன் சென்றவர்கள் யார் ? யார் ? அந்தச் செலவை அவர்களுடைய கட்சி திருப்பிச்செலுத்தி விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்றபோது ரூ. 1,33,522 செலவாயிற்று. அதை திராவிட முன்னேற்றக் கழகம் திருப்பிச் செலுத்திவிட்டது. ஆனால் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஏற்பட்ட உடல்நிலை வேறுவிதமானது. அது அபாயகரமானது என்ற காரணத்தினால் அவர் நான்கு முறை வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது.

மேய்ச்சல் தரிசில் வீடு கட்டியவர்களுக்கு பட்டா வழங்குதல்.

*94 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

திரு. க. சுந்தரம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேய்ச்சல் தரிசில் வீடு கட்டியுள்ளவர்களுக்கு பட்டா இல்லை என்ற ஆணையை மாற்றி பட்டா வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1990, சனவரி 27

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மேய்ச்சல் தரிசு, ஏரி, குளம், குட்டை தரிசுகளில் பெரும்பாலோர் குடியேறியுள்ள இடங்களில் உள்ளாட்சி துறை மூலமாக சாலை வசதி, விளக்கு வசதி, ஏனைய வசதிகள் செய்து தரப்பட்டு, வரி விதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு சலுகை விலையிலாவது பட்டா அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, 8-7-1986-ல் அனைத்து மேய்ச்சல் புறம்போக்குகளிலும் வீட்டுமனை பட்டாக்களை வழங்க தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆடுகளின் தீவனத்திற்காக பயன்படுத்துவதற்கு உள்ள நிலத்தைக் கொடுப்பது தவறாகும் என்றும், நஞ்சை நிலத்தை எப்படி கருதுகிறோமோ அது போன்று இந்த நிலங்களை பாதுகாக்க வேண்டுமென்று அரசு கருதி, மேற்படி ஆணையைப் பிறப்பித்துள்ளது. மேய்ச்சல் தரை-புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வது சம்பந்தமாக செயற் குறிப்புகளை அரசுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் கீழுள்ள அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தடை வருவதற்கு முன்பாகவே குடியேறிவிட்ட மக்களுக்காவது குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்களுக்காவது பட்டா வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டி, குடிசைகளைப் போட்டு வாழ்ந்துகொண்டிருப்பவர்களைத் தொல்லைப்படுத்த வேண்டுமென்ற நோக்கு அரசுக்கு இல்லையென்றாலும், மேற்படி இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புத் தொழிலை விட்டுவிடுவது நல்லது என்று நான் சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(9-15 மணி)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேய்ச்சல் நிலங்களிலே வீடுகளைக் கட்டிக்கொண்டு இருப்பவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பது உண்மையிலேயே பாராட்டுவதற்குரியது, வரவேற்கக் கூடியது. காரணம் எங்கெங்கெல்லாம் கண்மாய்கள் இருக்கிறதோ, மேய்ச்சல் நிலங்கள் இருக்கிறதோ அவை அத்தனையிலும் சென்று குடிசைகளைப் போட்டுக்கொண்டு ஊருக்கு மிகவும் தொந்திரவு கொடுக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. ஆகையினால் பொது நலனுக்குத் தேவைப்படுகிற

1990, சனவரி 27]

நிலங்களையெல்லாம், கண்மாய்கள், நடைபாதைகள், சுடுகாடு இந்த மாதிரியான நிலங்களையெல்லாம் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்தை தெரிவித்ததற்காக உறுப்பினர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. கணேசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கரூர் என்ற பகுதியிலே ரத்தின சபாபதி என்ற வீதியில் சிலருக்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் சிலருக்கு வழங்கப்படவில்லை. அதை வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: அது பற்றிய தகவல் என்னிடம இல்லை. கிடைத்தால் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு நான் முயற்சிக்க முயலக்கூடும்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேய்ச்சல் நிலங்களில் வீடுகளைக் கட்டுவதிலே அரசு புது ஆணையை ஏற்படுத்தியிருக்கிறது என்றாலும் கூட, நடைமுறை சித்தாந்தத்தை கருதி அரசு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். காரணம் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்றிருப்பதெல்லாம் தவறாக மேய்ச்சல் நிலம் என்று புத்தகங்களிலே போடப்பட்டிருக்கிறது என்றால் அப்படிப்பட்ட நிலங்களைக் குறித்து அரசுக்கு முறையீடு வருகிறபோது, அதற்கு விதி விலக்கு கொடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல சந்தர்ப்பங்களில் சித்தாந்தங்கள் சிதறுகின்றன. புதிய சித்தாந்தங்கள் உருவெடுக்கின்றன. அதற்கேற்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி மேய்ச்சல் தரிசு நத்தம் புறம்போக்குகளில் குடிசை கட்டி குடியேறியிருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது வீடே இல்லாத எந்தவிதமான சொத்து பத்து இல்லாத ஏழைகள். அவர்கள் எங்காவது ஒரு இடத்திலே குடிசை போட்டு இருக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றினால் எங்கே போய் இருப்பார்கள்? அவர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு இம்மாதிரி உள்ளவர்களை அரசு வெளியேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி ஆதிதிராவிட மக்கள் அவர்கள் குடிசை போட்டு இருக்கின்ற இடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு முன்பு மாற்று இடம் தேடி தரப்படுமா என்று கேட்கிறார்கள் நியாயமான கேள்வி. அரசு அந்த பரிசீலிக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேயும் 25 ஆண்டுக்காலமாக மேய்ச்சல் நிலம், அது போன்று புல்லவாரி போன்ற இடங்களில் எல்லாம் குடியிருக்கிறார்கள். அவர்கள் பட்டா கேட்டு எங்களை தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குடியேறிவிட்டு உடனடியாக பட்டாக்களைக் கேட்பது இப்போது ஒரு வாடிக்கையாக மாறி கொண்டிருக்கிறது என்பதை கனம் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் யாரும் ஆக்கிரமிப்பு செய்து குடிசைகளைப் போட்டால் நிச்சயம் அனுமதிக்கப்போவதில்லை என்பதை மட்டும் அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமுதி தாலூகாவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்தல்.

*3830. திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கமுதி தாலூகாவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது சேர்த்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கமுதி வட்டத்தை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்துடன் சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.